மாணவர் பெயர்:_____ ஐந்தாம் வகுப்பு

மூன்றாம் பருவம்

பயிற்சித்தாள்-4

மரபுத் தொடர்கள்

சூழலுக்கேற்ற மரபுத் தொடரைப் பொருத்துக.

1. மாறன் தான் வேலை செய்த நகைக் கடையில் உள்ள நகைகளைத் திருடிக் கொண்டு தப்பித்து ஓடினான்.

2. பொறுப்பின்றி ஊர் சுற்றித் திரியும் கபிலன் அயல்நாடு சென்று வியாபாரம் செய்ய வேண்டும் என்று கற்பனை உலகத்தில் வாழ்கிறான்.

3. தேர்வில் அனைத்துப் பாடங்களிலும் சிறப்புத் தேர்ச்சி பெற வேண்டும் எனத் தமிழரசி விடாமுயற்சியுடன் படிக்கிறாள்.

4. பேச்சுப் போட்டியில் மிகச் சிறப்பாக உரையாற்றிய செழியனை அனைவரும் பாராட்டினர்.

5. பணத்தை அளவுக்கு மேல் செலவு செய்த கோவிந்தன் இப்பொழுது சிரமப்படுகிறார்

மனக்கோட்டை

கங்கணம் கட்டுதல்

கம்பி நீட்டுதல்

அள்ளி இறைத்தல்

வெளுத்து வாங்கிய

LIVEWORKSHEETS